செ.வெ.எண்-01 நாள்-01.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசு பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.02.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**இதுக்குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வளர்ச்சித்துறை சார்பில் வடுகப்பாளையம் ஊராட்சியில் அரசு நடுநிலைப்பள்ளியில் 2 வகுப்பறைகள் கொண்ட கட்டிடத்தினையும், புதியதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தினையும் மற்றும் சன்னாவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 3 அறைகள் கொண்ட கூடுதல் பள்ளிக்கட்டிட பணிகளும் நடைபெற்றுவருவதை ஆய்வுசெய்து, பணிகளை துரிதமாக முடிக்க அதிகாரிக்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் நடப்பட்ட தேக்கு கன்றுகளுக்கு சொட்டுநீர் பாசன முறை அமைக்கப்பட்டு, சிரப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, உதவி செயற்பொறியாளர் திரு.அருள்மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரபாகரன், திரு.ஜாகிர்உசேன் மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்